பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 15 திங்கட்கிழமை 29.05.2023 கதிர்200

# தேசத்தை மீட்ட தந்தை ரணில் ஐ.தே.க. செயலாளர் பிரகடனம்

## வவுனியா கட்சி அலுவலக திறப்பு விழாவில் உரை

முன்னாள் பிரதமர் டி.எஸ.சேனநாயக்க தேசத்தின் தந்தை என்றால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தேசத்தைமீட்ட தந்தையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு நேற்று வவுனியாவில் பிரகடனப்படுத்தினார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார. வவுனியா, மில் வீதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியே 1948ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்று தந்தது. சுதந்திரத்திற்கு பின்னரான 75 வருடத்தில் 40 வருட காலம் போர் காரணமாக வடக்கிலும், தெற்கிலும் அபிவிருத்தி பாதிப்படைந்தது.

75 வருடத்தின் பின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி, ஜனாதிபதி ஆகியோர் அதிகாரததிற்கு வர முடியாத நிலை வந்ததால் இந்த நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இந்தப் பிரச்சினைகளைச் சவாலாக ஏற்று அதனை தீர்க்க முன் வந்தவர்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. டி.எஸ்.சேனநாயக்கவைதேசத்தின்பிதாஎன்றால்ரணில் விக்கிரமசிங்க அவர்களை தேசத்தை காப்பாற்றிய தந்தையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவர்தற்போது இந்தநாட்டில்அனைத்துமக்களும் இன, மத, பேதங்கள் இன்றி ஒரு தாய் மக்களாக வாழ



வேண்டும் என்ற நோக்கில் அரசியல் போச்சுக்களை முன்னெடுத்துள்ளார். இந்த நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம், பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற பேதங்கள் இல்லாது எல்லோரும் ஒரு குடையின் கீழ் வந்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு செயற்பட்டு கொண்டிருக்கிறார்.

2048 ஆம் ஆண்டு முழுமையாக அபிவிருத்தி அடைந்த நாடாக இந்த நாட்டை மாற்ற அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். சிலர் அதை விமர்சிக்கிறார்கள்.

ஆனால் அவர் திட்டமிட்டு செயலாற்றுகிறார். ☞2

## இது ரகசியம் அல்ல!

சிலவாரங்களுக்கு முன்னர் வரைக்கும் ஜனாதிபதித் தேர்தலை இநத வருடத்திலேயே நடத்துவது என்கிற கதை பரவலாக அடிபட்டது. அதற்கு அரசமைப்பில் இடமில்லை, தற்போதைய ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்லர், அவர் ஜனாதிபதி வெற்றிடத்தை நிரப்ப வந்தவர் என்பதால் அரசமைப்பின்படி, ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னரே ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது என்று சுட்டிக்காட்டப்பட்டபோது, சட்டத்தைத் திருத்தியாவது தேர்தல் நடத்தப்படும் என்றெல்லாம் ஆளும் தரப்பில் சொல்லப்பட்டடதது.

அந்தளவிற்கு ஜனாதிபதித் தேர்தலை அவசரமாக நடத்துவதில் ஆளும் தரப்பு ஆர்வமாக இருந்தது. ஆனால், பின்னர் திடீரென அதைப் பற்றி யாரும் பேசக் காணோம். இப்போது அடுத்த வருடத்தில்தான் ஜனாதிபதித் தேர்தல் ☞2

## பதவியாவில கஞ்சா சிக்கியது

அனுராதபுரம் மாவட்டம், பதவியா என்ற இடத்தில் உள்ள கடையொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டு விற்கப்பட்ட கஞ்சா பொதி ஒன்று படையினரின் உதவியுடன் கைப்பற்றப்பட்டுள்ளது.



பலசரக்கு விற்பனை நிலையம் ஒன்றுக்குள் மறைத்து வைத்து போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக யாழ்ப்பாணத்தில் உள்ள 51ஆவது படைப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவல் அடுத்து குறித்த பொதி கடையிலிருந்து கைப்பற்றப்பட்டது. ☞2

## அலி சப்ரி ரஹீம் எம்.பி மீண்டும் விஐபி வழியூடாகவே சென்றார்

### வெட்கக்கேடு என்கிறார் டலஸ் அழகப்பெரும

தங்கம் மற்றும் தொலைபேசிகளை நாட்டுக்கு சட்ட விரேதமாகக் கொண்டுவந்து தண்டப்பனம் செலுத்தி வெளியே வந்த புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மீண்டும் மிக முக்கிய விருந்தினர் வழி ஊடாகவே (VIP) நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இது வெட்கக்கேடானது. இதற்கு இந்த ஆட்சி என்ன செய்யப்போகின்றது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் மாதமொன்றுக்கு இரண்டு தடவைகள் வெளிநாட்டுக்குச் சென்று வந்துள்ளார். இறுதியாக அவர் தங்கத்துடனும், தொலைபேசிகளுடனம் கைது செய்யப்பட்டு பின்னர் தண்டப்பணம் செலுத்தி விடுவிக்கப்பட்டுள்ளார்.

அச்சமயத்தில் தான் அந்தத் தலைவருடன் பேசினேன், இந்தத்தலைவருடன் பேசினேன் எனக்கு உதவி செய்யவில்லை. அதனால் ஆட்சியாளர்களுக்கு எதிராக வாக்களித்தேன் என்று கூறினார்.

உண்மையில் அவர் சிறந்த நடிகர். அவர் சிறந்த கதை எழுத்தாளர். அவர் சிறந்த இயக்குநரும்கூட. ஆகவே இவற்றுக்கான விருதுகளை அவருக்கே வழங்க வேண்டும்.

தற்போது அவர் விசேட விருந்தினர்களுக்கான பகுதியூடாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். அவருக்கு அவ்வாறு வெளியேறுவதற்குஎந்தத்தடையும் விதிக்கப்படவில்லை., இந்த செயற்பாடு எவ்வளவு வெட்கக்கேடானது. இந்த ஆட்சி இந்த விடயத்தில் என்ன செய்யப்போகின்றது என்று கேள்வி எழுப்பினார்.

## எல்.ஆர்.சி. காணிகளை உரியோரிடமே திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை

### இரு நாள்களுக்குள் விண்ணப்பிக்கவேண்டும்

ந.லோகதயாளன்.

1971ஆம் ஆண்டு அரசுடமையாக்கப்பட்ட எல்.ஆர்.சி. காணிகளை மீண்டும் அதன் உரிமையாளர்களிடமோ அல்லது அவர்களின் வாரிசுகளிடமோ திருப்பி வழங்குவதற்கான அறிவித்தலை ஆணைக்குழு வெளியிடப்பட்டுள்ளது.

1971ஆம் ஆண்டு அரசினால் கொண்டு வரப்பட்ட காணி உச்ச வரம்பு சட்டத்தின்படி சுவீகரிக்கப்பட்டு தற்போது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆளுகைக்குள் இருக்கும் காணிகளே இப்படித் திருப்பி வழங்கப்படவுள்ளன.

அரசிடம் காணிகளை இழந்த அதன் உரிமையாளர்கள் அல்லது வாரிசுகள் இன்னும்இருநாள்களுகக்குள் (மே 31க்கு முன்னர்) அந்தக் காணிகளிற்கு விண்ணப்பித்து அவற்றைத் திரும்பப் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசுடமையாக்கப்பட்ட அதே காணிகளை ☞2

## வடமேல் மாகணத்திலிருந்து மாடுகள் வெளியேறத் தடை

வட மேல் மாகாணத்தில் இருந்து வெளி மாகாணங்களுக்குகால்நடைகளைக் கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. குருநாகல் மாவட்டத்தின் சில பகுதிகளில் கால்நடைகள் இடையே பெரியம்மை நோய் பரவி வருகின்ற காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின்வடமேற்கு மாகாண பதில் பணிப்பாளர் பி.சி.எஸ்.பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த தடை அறிவிப்பு தொடர்பில் வடமேல் மாகாண ஆளுநர் அநுரயாப்பா அபேவர்த்தன தெரிவித்ததாவது:வடமேல் மாகாணத்தில் மாடுகளுக்கு பெரியம்மை நோய் ஏற்பட்டுள்ளது. இது விரைவில் பரவக்கூடியதாகும். ஆகவே, இந்த நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் வரையில் மாடுகளை மாகாணத்திற்குள் கொண்டு வரவோ, வெளிக்கொண்டு செல்லவோ தடை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த நோய்கான தடுப்பூசியை இரு வாரங்களுக்குள் பூரணமாக செலுத்துமாறு அறிவுறுத்தியுள்ளேன். அதற்கமைவாக கால்நடை வைத்தியர்கள் நடவடிக்களை முன்னெடுக்க முடியும் -என்றார்.

## கிளிநொச்சி வீதி விபத்தில் 3 பிள்ளைகளின் தந்தை சாவு

கிளிநொச்சி பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட உமையாள்புரம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிநோக்கிபயணித்த டிப்பர் வாகனமும் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் எதிரெதிரே மோதிக்கொண்டன. கந்தசாமி கலையூகன் (வயது 39) என்ற ஆழியவளையைச் சேர்ந்த மூன்றுபிள்ளைகளின் தந்தை சம்பவ இடத்திலேயே உயர்ந்துள்ளார்

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகன சாரதி அவ்விடத்தில் இருந்து தப்பி சென்று கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக டிப்பர் ☞2

## மே 30 முதல் எரிபொருள் கோட்டா அதிகரிப்பு

மே 30 நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் கோட்டாவை அதிகரிக்கப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி - எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதனடிப்படையில், பதிவு செய்யப்பட்ட வாடகை முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் கோட்டா 22 லீட்டராகவும்ஏனையமுச்சக்கர வண்டிகளுக்கானஎரிபொருள் கோட்டா 14 லீட்டராகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

மோட்டார் சைக்கிள்களுக்கான எரிபொருள் கோட்டா 14 லீட்டராகவும் கார்களுக்கான எரிபொருள் கோட்டா 40 லீட்டராகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## முப்படைகளின் ஒத்துழைப்போடு ஓ.எல். பரீட்சை இன்று ஆரம்பம்

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப்பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று முதல் ஆரம்பமாகும் பரீட்சையில் 4 இலட்சத்து, 72 ஆயிரத்து 553 பேர் தோற்றுகின்றனர். இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர்நாயகம்அமித் ஜயசுந்தர தெரிவித்ததாவது:

இம்முறை பரீட்சையை சுமூகமாக கொண்டு செல்வதற்கு முப்படையினரினதும், பொலிஸாரினதும் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 8 வரையில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையில் 3இலட்சத்து 94ஆயிரத்து450பாடசாலை பரீட்சார்த்திகளும், 78 ஆயிரத்து 103 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றுகின்றனர்.

நாடு முழுவதும் 3,568 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, 40 ஆயிரம் அரச ஊழியர்கள் பரீட்சைப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இம்முறை இரத்மலானை, தங்காலை ஆகிய பகுதிகளில் இரண்டு விசேடபரீட்சைநிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இதனைவிடவும், கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் கைதி ஒருவருக்காகவும், மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களுக்காகவும் இரண்டுவிசேடநிலையங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

மேலும், டெங்கு மற்றும் இதர தொற்றுக் ☞2

## ரூ. 27ஆயிரம் கோடி வரி அறவிடப்படவேயில்லை

### துறைசார் மேற்பார்வைக் குழு தெரிவிப்பு

இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 27ஆயிரம் கோடி ரூபா வரியை அறவிட தவறியுள்ளதாக, தேசிய பொருளாதார மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், முறையாக வரியை செலுத்தாத பெரும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் 100 பேரின், சரியான தகவல்கள் இறைவரித் திணைக்களத்திடம் இல்லை என்றும் துறைசார் மேற்பார்வைக்குழு கண்டறிந்துள்ளது.

மேற்பார்வைக்குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே இது தொடர்பில் தெரிவித்ததாவது: ☞2

## பெரமுனவினரின் பிடிக்குள் சிக்கிக்கொண்டுள்ளார் ரணில்

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவினர் சொல்வதைக் கேட்டு நடக்கவில்லை என்றால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அக்கட்சியினர் குற்றப் பிரேரணையை கொண்டுவருவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இந்தவிடயம்சம்பந்தமாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதாவது:

தற்போது ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிடத்தில் நிறைவேற்று அதிகாரம் காணப்பட்டாலும், அவர் மெட்டுக்கட்சியினர் சொல்வதைக்கேட்டேநடக்கவேண்டும். அப்படி நடக்கவில்லை என்றால் அவரால் சண்டித்தனங்களைக்காட்டமுடியாது.

காரணம், ரணிலுக்கு எதிராக அவர்கள் குற்றப் பிரேரணையைக் கொண்டுவருவார்கள். அவ்வாறு செய்தால் ரணிலுக்குக் கிடைத்த ஜனாதிபதி பதவி பறிபோகும்.

ஆகவே, ரணில் விக்கிரமசிங்க பொதுஜனபெரமுவின் பிடிக்குள் சிக்கியுள்ளார். அதேனாலேயே அவர் பெரமுனவினர் தொடர்பில் அமைதியைக் கடைப்பிடிக்கின்றார் என்றார்.

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றே பேசுகின்றார்கள். அடுத்த வருடக் கடைசியில் எப்படியும் தேர்தல் வந்துவிடும். ஆனால், அதற்கு முன்னதாகத் தேர்தலை வைத்தால், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டவர் என்று தனக்கிருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி வென்றுவிட முடியும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கணக்கு. அதற்கு வசதியாக அடுத்த ஆண்டு முற்பகுதியில் எப்படியும் தேர்தலை நடத்திவிடும் முனைப்பில் ஆளும் தரப்பு இருக்கிறது. அதற்கான வேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளனவாம்.

இப்படி இந்த வருடத்தில் தேர்தலை நடத்த எடுத்த முயற்சிகள் பின்னர் கைவிடப் பட்டதற்குப் பெரிதாக ஒரு காரணமும் இல்லை. எல்லாம் சோதிடர்களின் கைவரிசைதான் காரணமாம்.

ராஜபக்சக்களுக்கும் சோதிடத்திற்கும் இருக்கும் தொடர்பு உலகப் பரகசியம். அவர்கள் எதைச் செய்தாலும் சோதிடர்களின் ஆலோசனை இல்லாமல் செய்வதில்லை. அதிலும் அரசியலில் மிக முக்கிய முடுவுகளை எடுப்பதற்கு அவர்களுக்கு சோதிடர்களின் வழிகாட்டல் அவசியம். ஆனால், தற்போதைய அதிகார உச்சபீடம் சோதிடத்தில் அத்தகைய பிரபலத்தை அடையவில்லை என்றாலும் இந்தத் தடவை அவரும்கூட சோதிட்டத்தில் உளளத் தொடங்கியுள்ளராம்.

அதியுச்ச அதிகாரத்தில் இருப்பவருக்கு நெருக்கமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் சோதிடர்களை அழைத்து கருத்துக் கேட்டிருக்கிறார்கள். உள்நாட்டின் புகழ்பெற்ற சோதிடர்களிடம் மட்டுமில்லை, இந்தியாவிலிருந்தும் சோதிடர்களை அழைத்து வந்து கருத்துக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வேறு வேறு மொழிகளிலும் வசனங்களிலும் சொல்லிய மிக முக்கியமான ஒரே விடயம். அதி உத்தமருக்கு குரு பெயர்ச்சி நடப்பதால் அவர் இப்போது கடினமான காலத்தைக் கடந்து கொண்டிருக்கிறார், அதே நேரம் வரும் செப்டெம்பர் மாதம் சுக்கிரன் திசை மாறுவதால், அதன் பிறகு நிலமை இன்னும் மோசமாகும். அதுவும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பின்னர் எந்தத் தேர்தலை நடத்தினாலும் அதில் வெற்றி பெறுவது கடினம் என்று தெரிவித்திருக்கிறார்களாம்.

இதையடுத்தே இந்த ஆண்டு தேர்தலை நடத்தும் முடிவைத் தள்ளிவைத்துவிட்டு அடுத்த ஆண்டு முற்பகுதியில் - அதாவது மார்ச் மாதத்திற்கு முன்பாக - ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான பணிகள் பின்னணியில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதுபோன்றுதான் மகிந்த ராஜபக்சவும் தனது ஆட்சிக் காலம் முழுதாக முடிவதற்குப் பல மாதங்கள் இருக்கையில் முன்னதாகவே 2015இல் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். அதுவும் சோதிடர்களின் ஆலோசனைப் படியே நடந்தது. ஆனாலும் அந்தத் தேர்தலில் தனது சகபாடியான மைத்திரிபால சிறிசேனவாலேயே தோற்கடிக்கப்பட்டார்.

பார்க்கலாம் தற்போதைய அதிஉத்தமருக்கு சோதிடர்கள் சொல்லியிருப்பது பலிக்கிறதா என்று.

.............

கடந்த வாரம் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச திடீரெனத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை அவரது வீட்டில் சந்தித்துக் கலந்துரையாடினார். அந்தச் சந்திப்புக் குறித்து வெளிவந்த செய்திகளில், அவர்கள் இருவரும் அரசியல் நிலவரம் பற்றிப் பேசினார்கள், ஜனநாயகத்திற்கு விரோதமான ஆட்சியாளர்களின் நிலைப்பாடு குறித்துக் கலந்துரையாடினார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டிருந்தது. இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதில் சஜித் உறுதியாக இருக்கின்றார் என்றும் சம்பந்தன் சொல்லியிருந்தார்.

ஆனால், இந்தச் சந்திப்பு அப்படிப்பட்ட அரசியல் தீர்வு குறித்தெல்லாம் நடக்கவில்லை என்பதுதானாம் உண்மை. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரைப் பதவி நீக்கும் விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக - அதாவது பதவி நீக்கப் பிரேரணைக்கு ஆதரவாக - வாக்களிக்கப் போகிறார்கள் என்கிற செய்தி அரசல் புரசலாக சஜித் காதில் விழுந்ததைத் தொடர்ந்தே அவர் சம்பந்தரைச் சென்று பார்த்திருக்கிறார். தமிழ் உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்று அவர் சம்பந்தரிடம் வலியுறுத்தியிருக்கிறார். அதற்கு தமது உறுப்பினர்கள் அந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கிக்கொள்வார்கள் என்று சம்பந்தர் பதலளித்துள்ளார்.

அதெல்லாம் சரி, தமிழ் அரசுக் கட்சியின் 5 உறுப்பினர்களையும் - அதாவது கட்சியின் சொந்த உறுப்பினர்களை - கட்டுப்படுத்தும் வல்லமை சம்பந்தருக்கு இருக்கிறது என்று நம்பலாம். அதனால் அவர்கள் அந்த ஆனால், சம்பந்தர் எங்கள் தலைவரே இல்லை என்று தூக்கி எறிந்துவிட்டு ஜனநாயகக் கூட்டணி என்று போனவர்களும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி விட்டார்களே அது எப்படி? ஜனாதபதியுடன் பின்கதவுத் தொடர்பாடல்களை வைத்திருப்பது போல சம்பந்தருடனும் அப்படிப்பட்ட தொடர்பாடல்களை வைத்திருக்கிறார்களோ என்னவோ!

**இடிமின்னல்**

## ரூ. 27ஆயிரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் முன்னெடுக்கப்படும் பெருமளவு பரிவர்த்தனைகள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உரிய முறைகள் எதுவும் இறைவரித் திணைக்களத்திடம் இல்லை என்பது தொடர்பில், இந்த மேற்பார்வைக்குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அறவிடுவதற்கு தவற விடப்பட்டுள்ள இந்தப் பணத்தை மீளபெற்றுக்கொள்வதற்கு பொறிமுறை ஒன்றைத் தயாரிக்கவும், புதிய இறை வரிச் சட்டங்களை தயாரிப்பதற்கும் தேவையான ஒத்துழைப்பைக் குழு வழங்கவுள்ளது - என்றார்.

## தேசத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாச் சமூகங்களும் மேம்படவேண்டும். அதற்கு எல்லா சமூகங்களுக்குள்ளும் உள்ள பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவேண்டும். நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட்டால் 2048ஆம் ஆண்டு ஒரு அபிவிருத்தி அடைந்த நாடாக இந்த நாடு மாறும். அதனால் நன்மை அடையப் போவது இந்த நாட்டு மக்களே. அந்த சுபீட்சமான 2048 இற்கு நாம் செல்ல வேண்டுமாக இருந்தால் அவருடன் இணைந்து அவரைப் பலப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஐக்கியதேசியக்கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ம.மயூரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமதிபால, வர்த்தக சங்கத்தினர், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப்பலரும் நிகழ்வில கலந்து கொண்டனர்.(100 )

## எல்.ஆர்.சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேயளவிலோ அல்லது அதற்கு நிகரான வேறு காணிகளையோ உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல் மற்றும் விண்ணப்பம் போன்றவை மூன்று மொழிகளிலும் ஆணைக் குழுவின் இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## கிளிநொச்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பி ஓடியுள்ளார். இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளி நொச்சி வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

இன்று இறந்தவரின் மகன் கா.பொ.த சாதாரண பரீட்சையில் தோற்ற இருக்கும் நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (113)

## பதவியாவில....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்ட பொதியின் நிறை 4.5 கிலோ கிராம். அதனை விற்பனை செய்த இருவர் பதவியா பொலிசாரிலு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## முப்படைகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு உள்ளாகியுள்ள மாணவர்களை சுகாதார திணைக்களத்தின் அதிகாரிகளின் உதவியுடன் அவர்களுக்கு இயலும் பட்சத்தில் பரீட்சையில் பங்குபற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

இற்காக அவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் சுகாதார அதிகாரிகளின் அறிக்கையையும் தம்முடன் எடுத்துவருவது முக்கியமானதாகும் அவர்களுக்கு அருகில் உள்ள பாடசாலையில் பரீட்சை எழுதுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

ஏதேனும் ஒருகாரணத்தினால் வைத்தியர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறுவதற்கு மறுதலிப்பாராயின் அவர்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் -என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22









காலைக்கதிர் Kalaikkathir

# கூமாங்குளம் கிராம அலுவலகத்தில் பழுதடைந்த அரிசிப் பைகள் மீட்பு

## சுகாதார பிரிவினரால் சீல் வைப்பு

வவுனியா கூமாங்குளம் கிராம அலுவலகத்தில் மக்களுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த அரிசி பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்படுவதாக தெரிவித்து குறித்த அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கட்டடம் சுகாதார பிரிவினரினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.



அரசாங்கத்தால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு 10கிலோ அரிசி பை விகிதம் வழங்குவதற்காக கூமாங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்கு ஒப்பந்தகாரரான வவுனியாவிலுள்ள பிரபல அரிசி ஆலையால் வெள்ளிக்கிழமை



காலை 4860 கிலோ அரிசி (10கிலோ பை விகிதம் 486 அரிசி பை) இறக்கப்பட்டது.

குறித்த அரிசி பைகள் மக்களுக்கு அன்றையதினமே பகிர்ந்தளிப்பட்டப்பட்டதுடன், அவை பழுதடைந்த நிலையில் காணப்பட்டதையடுத்து பொதுமக்கள் சுகாதார பிரிவினருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

கூமாங்குளம் கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு வருகை மேற்கொண்ட சுகாதார பிரிவினர் குறித்த அரிசியினை பரிசோதனைக்குட்படுத்தியதுடன் அவை பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்படுவதை உறுதிப்படுத்தியதுடன் அலுவலகத்தின் களஞ்சியசாலையை சீல் வைத்தனர்.

26.05.2023 அன்று மாலை 5.59மணிக்கு 260 மூடை (10கிலோ) அரிசியுடன் குறித்த மண்டபம் சமுர்த்தி உத்தியோகத்தர் ம.விக்கினேஸ்வரன் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் முன்னினையில் பொது சுகாதார பரிசோதகர் கே.சிவரஞ்சனால் சீல் வைக்கப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பில் குறித்த கிராம சேவையாளரிடம் வினவிய போது -

மக்களுக்கு அரிசி வழங்குவதற்க்காக குறித்த அரிசி மூடைகள் அரசாங்கத்தால் ஒப்பந்தம் வழங்கப்பட்ட தனியார் அரிசி ஆலையால் காலையே எமக்கு கிடைப்பெற்றது. அரிசி கிடைக்கப் பெற்று சில மணித்தியாலயங்களிலேயே மக்களுக்கு அரிசியைப் பகிர்ந்தளித்திருந்தோம்.

ஆனால் அவை பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்படுவதாக மக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு தகவல் வழங்கியிருந்தமையுடன் சுகாதார பிரிவினர் களஞ்சிய சாலையை சீல் வைத்திருந்தனர்.

மேலும் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரிசியை மீளப்பெறும் நடவடிக்கையை கிராம அபிவிருத்தி சங்கத்தினர் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார். (05)



# பெண் கான்ஸ்டபிள் மீது கத்தியால் தாக்குதல்

## வெயாங்கொடவில் சம்பவம்

வெயங்கொட, கும்பலொலுவ பிரதேசத்தில் கத்தியால் தாக்கப்பட்ட பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்த நிலையில் வட்டுப்பிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என நுங்கமுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச்சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் இசைக்கு முவில் பணிபுரியும் மீரிகம இருபது ஏக்கர் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் கான்ஸ்டபிளே நபரொருவரின் தாக்கு தலுக்கு இலக்காகினார். பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் தலை மற்றும் கைகளில் பலத்த காயமடைந்த நிலையில்சிகிச்சைபெற்றுவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (05)

# உடனடியாக நாடு திரும்ப நடவடிக்கைகளை எடுங்கள் ஓமானில் பணிபுரியும் இலங்கை பெண்கள் கோரிக்கை

ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக சுமார் இருவார காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த இலங்கைப் பணிப் பெண்கள் உள்ளிட்ட 72 பேர் அந்நாட்டுப் பொலிஸாரால் அழைத்துச்செல்லப்பட்டிருக்கும் நிலையில், விசாரணைகளின் பின்னர் அவர்கள் நாட்டுக்குத் திருப்பியனுப் பிவைக்கப்படுவார்கள் என்று இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓமானில் பணிபுரியும் இலங்கைப்பெண்கள், தாம் மீண்டும் நாடு திரும்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி கடந்த 8 ஆம் திகதி முதல் சுமார் இருவாரகாலமாக ஓமானில் உள்ள இலங்கைத்தூதரகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். கடந்த 8 ஆம் திகதி சுமார் 10 பேரால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் 9 ஆம் திகதி மேலும் 10 பேரும், 14 ஆம் திகதி மேலும் 5 பேரும் இணைந்துகொண்டனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களில் பலர், தாம் பணிபுரியும் வீட்டு உரிமையாளர்களால் துன்புறுத்தப்படுகின்றனர் எனவும் சிலர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டதுடன் தம்மை மீண்டும் நாட்டுக்கு அழைத்துச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டிலுள்ள இலங்கைத்தூதரக அதிகாரிகளிடம் வலியுறுத்தினர்.

ஓமானில் பணிபுரியும் பெண்களில் பலர் இலங்கையிலுள்ள பதிவுசெய்யப்படாத முகவர்களால் ஏமாற்றி அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் அங்கு சென்றதன் பின்னர் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர் எனவும் சுட்டிக்காட்டிய பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் தலைவி ஷ்ரீன் ஸரூர், இது தொடர்பாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷநாணயக்காரவிடம் பேசிய போதிலும் சாதகமான பதில் எதுவும் கிட்டவில்லை என்று கவலை வெளியிட்டார்.

மேலும் இவ்வாறு வேலை வாய்ப்புக்காக ஓமானுக்குச்சென்ற பெண்களில் பலர் இலங்கையில் நுண்கடன்பெற்று அதனை மீளச் செலுத்தமுடியாமல் பாதிக்கப்பட்டவர்கள் என்றும், கடந்த ஆண்டு தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியால் வாழ்வாதாரத்தை இழந்தவர்கள் என்றும் தெரிவித்த ஷ்ரீன் ஸரூர், அவர்கள் நாட்டுக்குப் பெருமளவான அந்நியச்செலாவணி வருமானத்தை ஈட்டித்தருகின்ற போதிலும் அவர்களது நலனில் அரசாங்கம் அக்கறை



செலுத்தாமல் இருப்பது கவலையளிப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பெண்களின் நிலை தொடர்பாக ஓமானுக்கான இலங்கைத் தூதுவர் ஸபருல்லா கானிடம் வினவினோம். போராட்டத்தில் ஈடுபட்டுவந்த சுமார் 25 பேர் உள்ளடங்கலாக பாதுகாப்பான தங்குமிடத்தில் இருந்த சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் ஓமானின் தொழில்திணைக்கள அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அந்நாட்டுப் பொலிஸாரால் கடந்த செவ்வாய்கிழமை அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர் எனவும் தெரிவித்த அவர், விசாரணைகளின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டு நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள் என்று கூறினார்.

இலங்கை போன்ற நாடுகளிலிருந்து வருகைதரும் பணிப் பெண்களை வேலைக்கு அமர்த்துவதற்காக ஓமானிலுள்ள வீட்டு உரிமையாளர்கள் 16 - 17 லட்சம் ரூபாவை வேலைவாய்ப்பு முகவர்களுக்குச் செலுத்துகின்றனர் எனவும், அதன்படி குறித்த பணிப்பெண்கள் 2 வருடங்கள் வரை பணிபுரிய வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும், அந்தப் பணிப்பெண்களுக்குரிய வீசாவை வீட்டு உரிமையாளர்களே தயார்செய்கின்றனர் எனவும் சுட்டிக் காட்டிய தூதுவர் ஸபருல்லா கான், எனவே அவர்கள் குறுகிய காலத்தில் நாடு திரும்பவேண்டுமெனில் அதற்குக் குறித்த வீட்டு உரிமையாளர்களின் அனுமதி அவசியம் என்றும் இல்லாவிடின் அதற்குரிய நட்டஈட்டை செலுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இது பற்றி விளக்கமளித்த வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் சௌரத் யாப்பா, ஓமான் பொலிஸாரால் அழைத் துச்செல்லப்பட்ட சுமார் 72 இலங்கையர்கள் தொடர்பில் விசார ணைகளை மேற் கொண்டதன் பின் னர் அந்நாட்டுப் பொலி ஸாரே அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும், இந்த விடயம் தொடர்பில் இதுவரையில் தமக்கு எவ்வித தகவல்களும் கிட்டவில்லை என்றும் தெரிவித்தார். இருப்பினும் இந்த விடயத்தில் அங்குள்ள இலங்கையர்களுக்கு உடனடிக் கடவுச்சீட்டு போன்ற தேவைகள் காணப்படின், அதனைப் பூர்த்திசெய்வதற்குத் தாம் தயாராக இருப்பதாக உறுதியளித்தார்.

ஓமானில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள இலங்கைப்பெண்கள் துன்புறுத்தல்களுக்கும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கும் நிலையில், இந்த விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்குமாறு கோரி ஏற்கனவே கடந்த பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர்களான டொமொஜூயா ஒபொகாட்டா மற்றும் சியோபென் முலேலி ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் ஆயிரம் பேருக்கு புதிய நியமனம் வழங்கல்

குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் 1,000 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தாய் மற்றும் குழந்தை சுகாதார சேவைகளை விரிவுபடுத்துவதற்காக, உலக வங்கியின் ஆரம்ப சுகாதார அமைப்பு வலுவூட்டல் திட்டத்தில் மேலும் ஆயிரம் மாணவர் குடும்ப சுகாதார சேவை அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்ய நிதி ஒதுக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாணவர் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் பயிற்சி கொடுப்பனவை செலுத்துவதற்காக இந்த நிதி ஒதுக்கப்படுகிறதது.

ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தும் உலக வங்கி திட்டத்தில் இருந்து ஏற்கனவே பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வரும் ஆயிரம் மாணவர் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி காலத்தில் உதவித்தொகை வழங்கப்படும் என நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் வைத்தியர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார். (05)








# நிதி நிறுவனமொன்றில் பணியாற்றும் இருவரை கடத்திய 6 பேர் தெமட்டகொடவில் கைது!

கொழும்பு, தெமட்டகொட பகுதியில் இயங்கும் நிதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் பெண் மற்றும் ஆண் ஒருவரை கடத்திச்சென்ற ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையின் ஸ்ரீஜயவர்தனபுர முகாமின் விசேட ஆயுதங்கள் மற்றும் புலனாய்வு குழுவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பணப் பிரச்சினை காரணமாக இந்த கடத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்திச்செல்லப்பட்ட பெண் மற்றும் ஆண் ஆகியோர் கொழும்பு, தெமட்டகொடை பிரதேசத்தில் இயங்கும் நிதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளதுடன், கடத்தலுடன் சம்பந்தப்பட்ட நபர்களில் ஒருவரது காதலி, குறித்த நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த பணத்தை திரும்ப வழங்காத காரணத்தால் இந்த கடத்தல் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை மற்றும் மாபொல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர். தமக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாகப் பெண் மற்றும் ஆண் ஆகியோர் தெமட்டகொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய புறப்பட்டுச் செல்லும் போது சந்தேக நபர்களால் கடத்தப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் கொழும்பு 10 மற்றும் கொழும்பு 9 பிரதேசங்களை சேர்ந்த 22 முதல் 28 வயதுக்குட்பட்டவர் கள் எனப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

கடத்தலுக்கு பயன் படுத்திய ஓட்டோ மற்றும் மோட்டார்சைக்கிளை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மேலதிக விசாரணைகளுக்காக தெமட்டகொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வீதிப் பாதுகாப்பு அவசியம்

மே 17 முதல் 21 வரை ஐ.நா. வீதி பாதுகாப்பு வாரமாக இருந்தது. இதையொட்டி கடந்த வாரத்தில் போக்குவரத்து விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்பட்டது. காவல்துறையினர் பல இடங்களிலும் போக்குவரத்து ஒழுங்குகள் நெறிமுறைகள் தொடர்பான கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடத்தினார்ககள். குறிப்பாகப் பாடசாலை மாணவர்களுக்கு இந்த வகுப்புகள் நடத்தப்பட்டன. பொது அமைப்புக்கள் சார்பிலும் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்றன.

வழிப்புணர்வு நிகழ்வுகள் ஒருபுறம் நடந்து கொண்டிருந்த காலத்திலேயே வடக்கு – கிழக்கு உட்பட நாடு முழுவதும் வீதி விபத்துக்களில் பலரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுக்கொண்டிருந்தன. அதற்கு முன்னரும் அதற்குப் பின்னரும்கூட தொடர்ந்து வீதி விபத்துக்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. அவற்றில் பலர் உயிரிழக்கிறார்கள். மேலும் பலர் காயமடைகின்றார்கள்.

வீதி விபத்துக்களில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 2 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்கின்றன புள்ளிவிவரங்கள். 2022இல் மட்டும் 19 ஆயிரத்து 740 விபத்துக்கள் பதிவாகியிருக்கின்றன. இவற்றில் 2 ஆயிரத்து 371 விபத்துக்கள் மிக மோசமானவை. கடந்த ஆண்டில் மட்டும் 2 ஆயிரத்து 485 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்திருக்கின்றனர்.

இலங்கையில் நடக்கும் வீதி விபத்துக்களில் உயிரிழப்பவர்களிலல் முதலிடத்தில் இருப்பவர்கள் உந்துருளி ஓட்டிகளே (மோட்டார் சைக்கிள்). 2022இல் 806 விபத்துக்கள் உந்துருளிகளுடன் தொடர்புபட்டவை. விபத்துக்களில் ஏற்படும் உயிரிழப்புக்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவை உந்துருளி ஓட்டிகளின் சசாவுகளே. கடந்த வருடத்தில் மட்டும் 5 ஆயிரத்து 133 உந்துருளி ஓட்டிகள் அங்கவீனர்களாகியுள்ளனர்.

ஆண்டொன்றுக்கு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் உயிர்களை வீதிகள் காவு கொள்கின்றன என்றால் அவை மனிதப் பாவனைக்கு உரியவையாக இல்லை என்றுதானே அர்த்தம். அதன் மீது உரிய கவனம செலுத்தி விபத்துக்களையும் உயிரிழப்புக்களையும் அங்கவீனமாதல்களையும் உடனடியாகக் குறைக்க வேண்டும்.

வீதிஒழுங்குகளைமதிக்காமை, மதுசெலுத்திவிட்டு வாகனத்தை ஓட்டுதல், போதைப் பொருட்களின் பாவனைகள், மன அழுத்தத்துடன் வாகனம் செலுத்துதல் என்பன வீதி விபத்துக்களுக்கான முக்கிய காரணங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்தி இழப்புக்களைக் குறைக்க சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடைமுறைகளை இன்னும் இறுக்கமாக்குதல், தவறுகளுக்கு உயர்ந்தபட்சத் தண்டை மற்றும் தண்டம்விதித்தல், சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கிய பின்னரும் குறைந்தபட்சம் இரண்டாண்டுகளுக்கு ஒருதடவையாவது சாரதிகளின் வினைத்திறனையும் போக்குவரத்து ஒழுங்குகள் குறித்த அவர்களின் அறிவையும் பரிசோதித்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கவேண்டும்.

ஒருமுறை விபத்தை ஏற்படுத்தி உயிரிழப்புக்கு அல்லது அங்கவீனத்திற்குக் காரணமாக இருப்பவர்கள் மீண்டும் ஒருபோதும் வாகனமோட்ட முடியாது என்கிற சட்டத்தையும் உருவாக்கவேண்டும். அப்போதுதான் சாரதிகள் தமது பயணத்தில் கரிசனையோடு இருப்பார்கள்.

## மாகாண சபைத் தேர்தல் சட்டம்: ஏ.சுமந்திரனின் தனிநபர் பிரேரணைக்கு வரவேற்பு

### சரத் என்.சில்வா பாராட்டு



புதிய மாகாண சபை சட்டமூலத்துக்கு நான் எதிர்ப்பு தெரிவித்தபோது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் என்னைக் கடுமையாக விமர்சித்தார்.

மாகாண சபைத் தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள பின்னணியில் பழைய மாகாண சபைத் தேர்தலை நடத்த எம்.ஏ.சுமந்திரன் தனிநபர் பிரேரணையொன்றைகொண்டுவந்துள்ளமை வரவேற்கத்தக்கது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய நூலக சாலையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

மாகாண சபைத் தேர்தலுக்கு நேர்ந்த கதியே உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கும் நேரிடும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நிதி இல்லை என்று குறிப்பிடும் அரசாங்கம் அமைச்சரவையை விரிவுபடுத்த விசேட கவனம் செலுத்தியுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு முழு உலகத்தையும் வலம் வருகிறார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகத் தற்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதற்கு நல்லாட்சி அரசாங்கத்தின் இரு அரச தலைவர்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தைத் திருத்தம் செய்யும் வகையில் 2017ஆம் ஆண்டு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

பழைய தேர்தல் முறையில் திருத்தம் செய்யும் வகையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தின.

மாகாண சபைத் தேர்தல் புதிய சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் என்னைக் கடுமையாக விமர்சித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் ஏற்படுத்தும் மாற்றம் மாகாண சபைத் தேர்தலுக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதை 2017 ஆம் ஆண்டு குறிப்பிட்டேன்.

எனது கருத்து தற்போது உண்மையாகியுள்ளது. காலம் கடந்த நிலையில் பழைய தேர்தல்முறையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தும் தனிநபர் பிரேரணையைகூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்துள்ளமை வரவேற்கத்தக்கது. - என்றார். (05)

## வடக்கு, கிழக்கில் சட்ட விரோதமாக நிர்மானங்கள் முழுமையான அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை

### விதுர விக்கிரமநாயக்க கூறுகிறார்



வடக்கு, கிழக்கில் உள்ள தொல்பொருள் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத நிர்மாணங்கள் தொடர்பில் முழுமையான அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப்படுமென புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் தொல்பொருளியல் திணைக்களத்தால் அடையாளம் காணப்படும் பகுதிகளில் பௌத்த அடையாளங்கள் நிறுவப்படுதல் மற்றும் தனியார் காணிகளில் பௌத்த விகாரைகள் நிறுவப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு, கிழக்கில் போர் நிலைமைகள் நீடித்தமையால் தொல்பொருள் பகுதிகள் முழுமையாக அடையாளம் காணப்படவில்லை.

தொல்பொருள் என்பது நாட்டின் மரபுரிமைகள் சார்ந்த விடயமாகும். அதற்கும் இன அடையாளங்களுக்கும் தொடர்பில்லை.

இந்நிலையில் நாம், வடக்கு, கிழக்கில் காணப்படுகின்ற தொல்பொருளியல் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட அனைத்து அடையாளங்களும் சட்டத்துக்கு முரணானவையாகும்.

ஆகவே, அவை தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றைக் கோரியுள்ளேன் அந்த அறிக்கை கிடைத்ததும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

குருந்தூர்மலை, வெடுக்குநாறி தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. அந்த வழக்குகளின் தீர்ப்புக்கள் வந்தபின்னரே இறுதியான தீர்மானத்தை எடுக்க முடியும்.

கிளிநொச்சி உருத்திரபுரம் கந்தசுவாமி கோவில், திருக்கேணேஸ்வரம் உள்ளிட்ட பகுதிகளில் தொல்பொருளியல் அடையாளங்கள் காணப்படுவதாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சில இடங்களில் தொல்பொருளியல் பகுதிகளில் கோவில்கள் உள்ளிட்ட நிர்மாணங்கள் செய்யப்பட்டுள்ளன.

அவை தொடர்பிலும் கரிசனை கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன், வடக்கு, கிழக்கில் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள்.

அவர்களின் அடையாளங்களும் காணப்படுகின்றன. ஆகவே அந்த வரலாற்று தகவல்களையும் பாதுகாக்க வேண்டியதுகடமையாகின்றது. அதுபற்றி யாரும் அச்சமடைய வேண்டியதில்லை. - என்றார். (05)


## சிம்பாப்வே போதகரை வரவேற்பதற்காக விமானநிலைய அதி உயர் பாதுகாப்பு பகுதிக்குள் சென்றார் ஜெரோம்

### அனுமதி வழங்கியது யார்? வெளியாகியது புதிய படம்

சர்ச்சைக்குரிய போதகர் ஜெரோம் பெர்ணாண்டோ கடந்த வருடம் சிம்பாப்வே போதகர் உபேர்ட் ஏஞ்சலை வரவேற்பதற்காக கொழும்பு விமானநிலையத்தின் மிகவும் பாதுகாப்பான பகுதிக்குள் எவ்வாறு சென்றார் எனக் கேள்விகள் எழுந்துள்ளன.

ஜெரோம் பெர்ணாண்டோ தனது தனிப்பட்ட செல்வாக்கையும் அரசியல்செல்வாக்கையும் பயன்படுத்தி பாதுகாப்பு ரீதியில் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் சென்றுள்ளார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விமானநிலையத்தின் பாதுகாப்பு ரீதியில் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் மிக முக்கிய இராஜதந்திரிகளின் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் விவிஐபி பஸ்ஸில் ஜெரோம் பெர்ணாண்டோ சிம்பாப்பே போதகருடன் காணப்படும் படம் கிடைத்துள்ளது.



இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் நளின்ஹெரத் அந்த படம் விமானநிலையத்தின் அதி உயர்பாதுகாப்பு பகுதிக்குள் எடுக்கப்பட்டதுஎன்பதைஉறுதி செய்துள்ளார். அந்த பகுதிக்குள் நுழைவதற்கான அனுமதியை ஜெரோம்பெர்ணாண்டோ எவ்வாறு பெற்றார் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பொறியியலாளரை தவிர வேறு எவரும் அந்த பகுதிக்குள் நுழையமுடியாது. இதுஎவ்வாறு இடம்பெற்றதுஎன்பதுதெரியாது என தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளார் அவர்கள் விருந்தினர்களிற்காக காத்திருக்கும் பகுதியில் அல்லது ஓய்வறையில் காத்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் மிகமிக முக்கியமானபிரமுகர்களிற்கான பஸ்ஸில் ஏறமுடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள்இது எவ்வாறு இடம்பெற்றது என ஆராய வேண்டும் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்பவேண்டியிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர்
Kalaikkathir

# சர்வதேச சிலம்பம் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற வீர வீராங்கனைகளுக்கு பாராட்டு விழா



கடந்த வாரம் இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்ற முதலாவது சர்வதேச சிலம்பம் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்து இலங்கைக்கு பெருமை சேர்த்த வீர வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை கொட்டகலையில் நடைபெற்றது.

கொட்டகலை தனியார் விடுதி ஒன்றி இலங்கை சிலம்பம் சம்மேளனத்தின் தலைவர் எஸ். எ.கந்தசாமி நாயுடு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது வீர வீராங்கனைகளின் சிலம்பம் நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது. மேலும் இதில் பதக்கங்கங்களை பெற்றுக் கொண்ட பெற்றோர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கை, இந்தியா, சுவிட்ஸர்லாந்து, பெல்ஜியம், இத்தாலி, சிங்கப்பூர், மலேசியா, டுபாய், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்த முதலாவது சர்வதேச சிலம்பம் போட்டியில் இலங்கை வீர விராங்கனைகள் 9 தங்கம் உட்பட 69 பதக்கங்களைப் வெற்றிக் கொண்டனர்.

அதே நேரம் இந்திய முதலாம் இடத்தையும் மூன்றாம் இடத்தை சுவிஸ்லாந்தும் பெற்றுக் கொண்டதாக இலங்கை சிலம்பம் சம்மேளனத்தின் பொது செயலாளரும் பிரதம பயிற்றுவிப்பாளருமான இராமர் திவாகரன் தெரிவித்தார். (05)

# தம்புள்ளை மாநகர சபையின் முன்னாள் மேயர் ஒருவரின் சகோதரனால் 12 வயது சிறுவன் பாலியல் துஷ்பிரயோகம்!

தம்புள்ளை மாநகர சபையின் முன்னாள் மேயர்களில் ஒருவரின் சகோதரனால் 12 வயதுச் சிறுவனொருவன் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து, தம்புள்ளை பொலிஸின் சிறுவர் பாதுகாப்பு பிரிவினர், விசாரணைகளின் பின்னர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுவனை கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தம்புள்ளை பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (05)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதற்கு மக்கள் சக்தி எம்.பிக்கள் பலர் விருப்பமாம்

## ரவூப் ஹக்கீம் போட்டுடைப்பு



ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படவேண்டும் என்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் பல நாடாளுமன்ற உறுப்பினர்களது எண்ணம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

குண்டசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர், நாட்டின் நலனுக்காக ஜனாதிபதி தமது கொள்கைகளை நடைமுறைப்படுத்த விரும்பினால் அவருடன் இணைந்து செயற்பட முடியும் எனக் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டில் இருப்பதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளதால், ஜனாதிபதியுடன் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு தயாராக இருப்பதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு உடன்படிக்கையோ அல்லது கலந்துரையாடலோ கொள்கையின் அடிப்படையில் மட்டுமே அமைய வேண்டுமேயன்றி அரசாங்கத்தை நோக்கி உறுப்பினர்களை இழுக்கும் நோக்கத்துடன் இருக்கக் கூடாது என்றும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார். (05)

# வழிபாட்டு நிகழ்வில் வன்முறைகள்: கெக்கிராவ மாணவர் 7 பேர் கைது

கெக்கிராவ பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற சமய வழிபாட்டு நிகழ்வொன்றின் போது வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அந்தப் பாடசாலையின் 7 மாணவர்கள் கெக்கிராவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கெக்கிராவ புறநகர் பகுதியில் உள்ள தேசிய பாடசாலையொன்றில் இடம்பெற்ற வழிபாட்டு நிகழ்வின்போது, அதே பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் குழுவொன்று இவ்வாறு நடந்துகொண்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த மாணவர்கள் பிரித் மண்டபத்தையும் தாக்கி சேதப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டுள்ள மாணவர்கள் 11, 12 மற்றும் 13ஆம் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஈ.பி.டி.பி. வேட்பாளர் யாழில் விபத்தில் சாவு

சைக்கிளில் பயணித்த வயோதிபரை கார் பின்னால் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

ஏ-9 பிரதான வீதியில் சாவகச்சேரி நியூமெடிக்கெயர் மருத்துவமனைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஈ.பி.டி.பி. கட்சியின் உள்ளூராட்சி சபை வேட்பாளரான நுணாவில் மத்தியைச் சேர்ந்த கந்தசாமி கமலநாதன் (வயது - 74) என்பவர் உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனமுற்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட உறவினரை பார்ப்பதற்கு அவர் சென்றுள்ளார்.

எனினும், அந்த உறவினர் இறந்துவிட்டாரென மருத்துவர்கள் கமலநாதனிடம் தெரிவித்துள்ளனர்.

அந்த தகவலை வீட்டாருக்கு சொல்வதற்காக சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கார் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார். (05)

# கலாநிதி ஆறு. திருமுருகனின் பிறந்த தினத்தில் இளைய தலைமுறை ஆற்றலார் விருது வழங்கல்

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செலவர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிறந்த நாள் அற நிதியச் சபையின் இந்த ஆண்டிற்கான இளைய தலைமுறை ஆற்றலர் விருது நேற்று (சனிக்கிழமை) தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

கலாநிதி ஆறு.திருமுருகனின் 62 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த விருது வழங்கும் விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரமும் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை பீடாதிபதி பு.ரவிராஜனும் கலந்து சிறப்பித்தனர்.







புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் பல அறிஞர்கள் மற்றும் சமூகப் பெரியவர்கள் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் இவ்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த விருது வழங்கும் விழாவில் மருத்துவத்துறை இளம் ஆற்றலாளராக முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உள நல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை ஜெகரூபனும் சிறந்த எழுத்துலகில் இளம் ஆற்றலாளராக தாட்சாயணி என்ற பெயரில் பல படைப்புக்களை உருவாக்கிய சங்கானை பிரதேச செயலாளர் திருமதி பிறேமினி பெண்ணம்பலமும் இளைய தலைமுறை ஆற்றலார் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (05)

## இந்தியாவில் இலங்கை முகாமில்

# சாதனை படைத்த தமிழ் மாணவிக்கு அமைச்சர் உதவியில் மேல்படிப்பு

இந்தியா - ஆணையூர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமை சேர்ந்த மாணவி ரித்யுஷா பன்னிரண்டாம் வகுப்புப் பரீட்சையில் 600 இற்கு 591 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மாணவியின் திறமையைப் பாராட்டி தமிழக தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிற்றல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மாணவிக்கு கல்லூரி இடஒதுக்கீடு வழங்கி பாராட்டியுள்ளார்.

இந்நிலையில் மாணவியின் வெற்றி குறித்து தமிழக தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மேலும் தெரிவிக்கையில்,



மாணவி ரித்யுஷாவைப் பற்றி சில நாள்களுக்கு முன்பு ஒரு தனியார் தொலைக்காட்சி வாயிலாகத் தெரிந்து கொண்டேன். மாணவியை இல்லத்திற்கு அழைத்து வாழ்த்தும் போது 'படிக்க வசதியில்லை; ஒன்லைன் மூலம் கல்வி கற்க உள்ளேன்', என அந்த மாணவி என்னிடம் தெரிவித்திருந்தார்.

நேரடியாக கல்லூரியில் கற்பதன் அவசியத்தை எடுத்துக் கூறியதோடு, மதுரை லேடி டோக் கல்லூரி முதல்வரிடம் அம்மாணவியின் மேற்படிப்பு செலவு முழுவதையும் நான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்திருந்தேன்.

மேலும் மாணவி படிக்க விரும்பும் துறையில் இணைய அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கமைய, தற்பொழுது லேடி டோக் கல்லூரி முதல்வர் அம்மாணவிக்குச் சிறப்பு அனுமதியின் அடிப்படையில் இடம் ஒதுக்கியுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார். (05)





காலைக்கதிர் Kalaikkathir

# நாணய நிதியத்தைவிடவும் இலங்கைக்கு அதிக உதவிகளை நாம் வழங்கியுள்ளோம்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் பெருமிதம்



சர்வதேச நாணய நிதியத்தை விடஇந்தியாஇலங்கைக்குஅதிகளவு உதவிகளை வழங்கியுள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தை விட இந்தியா இலங்கைக்கு அதிகளவு உதவிகளை செய்துள்ளது என வலியுறுத்தியுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்திய பெருங்கடலில் உள்ள தீவுகள்வளைகுடா நாடுகள் தென்கிழக்காசியாவில் உள்ள நாடுகளை உள்ளடக்கிய விஸ்தரிக்கப்பட்ட அயலை உருவாக்குவது தொடர்பாகப் பிரதமர் மோடி அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகமொன்றில் மோடியின் இந்தியா எழுச்சிபெறும் சக்தி என்ற கருப்பொருளில் உரையாற்றுகையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்புகளும் அண்டை நாடுகளில் இந்தியா பற்றிய பார்வையும் மாற்றமடைந்துள்ளன. இலங்கையில் கடந்த வருடத்தில் இடம்பெற்ற விடயங்களை விட வேறு எதுவும் வியத்தகு விதத்தில் இதனை வெளிப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடந்த வருடம் பெரும்பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் நாங்கள் உதவினோம் எனவும் தெரிவித்துள்ள ஜெய்சங்கர், சர்வதேசநாணயநிதியம் இலங்கைக்கு உதவியதை விட நாங்கள் அதிகளவு உதவியுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

உங்களில் எவரேனும் இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் மேற்கொண்டிருந்தால் இந்த உதவியால் இந்தியா குறித்து மாற்றமடைந்துள்ள கருத்தை அவதானிக்கமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் இன்று பெரிய இலட்சியம் மிக்க - செல்வாக்கு மிக்க - இந்தியாவிற்காக முயற்சிக்கின்றோம் எனத் தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எங்கள் அயல்களை விஸ்தரிக்க முயல்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இந்த விஸ்தரிக்கப்பட்ட அயல் எவ்வாறானதாகயிருக்கவேண்டும் என்பது குறித்தும் ஆராய்கின்றோம்,அது இந்து சமுத்திரத்தில் உள்ள தீவுகளாக இருக்கலாம்,தென்கிழக்காசியா வளைகுடாவில் உள்ள நாடுகளாக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியம் சவூதி அரேபியா ஆகிய நாடுகளுடனான உறவுகள் பெருமளவு மாறியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்கள் அயலை பற்றிய மிகவும் சுருக்கப்பட்ட பார்வையிலிருந்து நாங்கள் இலட்சியம் மிக்க பார்வையைநோக்கிமாறியுள்ளோம் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (05)

# நுவரெலியா பகுதிகளில் டெங்கு ஒழிப்பு திட்டம்



சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்துசெல்லும்நுவரெலியாமற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலகமும், நுவரெலியா மாநகர சபையும் இணைந்தே இதற்கான ஏற்பாடுகளைமுன்னெடுத்துள்ளன.

நுவரெலியாவில்டெங்குபரவினால் அது சுற்றுலாத்துறைக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் சுற்றுப்புறத்தை தூய்மைபடுத்துமாறு மாவட்ட செயலாளர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.இதன்முதற்கட்டமாக நுவரெலியா கிரகரி வாவி குதியில் மாவட்டசெயலாளர்தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூராட்சிமன்றநிறுவனங்கள்,தோட்டநிர்வாகங்கள்,கிராமியக் குழுக்களையும் இணைத்துக் கொண்டு நுவரெலியா மாவட்டம் முழுதும்டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. (05)

# டயனா கமகேயின் திட்டம் தோல்வி



சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவால் முன்னெடுக்கப்பட்டதிட்டம்தோல்வியடைந்துள்ளநிலையில், தாமரை கோபுரத்தின் 44 ஆயிரம் சதுர அடி இரண்டாவது மாடிக்கு முதலீட்டாளர்களைத்தேடுவதாகத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த கையொப்பமிடும் நிகழ்வில் அமைச்சர் டயானா கமகே மற்றும் அரச சுற்றுலாத்துறை அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர்அரோஷபெர்னாண்டோ ஆகியோர்கலந்துகொண்டுள்ளனர்.

எனினும், ஒப்பந்தம் முடிந்து மூன்று மாதங்கள் ஆகியும், தேவையான சூதாட்ட உரிமத்தை நிறுவனம் பாதுகாக்க வேண்டும் என்பது உட்பட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்தநிலையில், கோரிக்கையின் பேரில் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. அந்த காலப்பகுதியிலும் நிபந்தனை நிறைவேற்றப்படவில்லை.

எனவே,தற்போதுகுறித்ததளம் மீண்டும்வாடகைக்குவிடும்நோக்கில் தயாரிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தாமரைக் கோபுரத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான மேஜர் ஜெனரல் பிரசாத்சமரசிங்கதெரிவித்துள்ளார்.

மூன்றுவருடங்களில்மொத்தமாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் உள்ளீட்டில் இலங்கையின் 'முதல் வெளிநாட்டு நிதியுதவி கெசினோமற்றும்பொழுதுபோக்கு மையத்தை' திறக்கும் என்று அமைச்சர் கமகே முன்னதாகக் கூறியிருந்தார்.


தாமரை கோபுரத்தின் கணிசமான இடம் ஏற்கனவே உணவு வழங்குபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

இதுவரை 828,000க்கும் அதிகமான மக்கள் - அவர்களில் 14,700 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கோபுரத்தைப் பார்வையிட்டுள்ளனர். (05)

# யாழ். பண்ணையில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச்சாவடி மீது கல் வீசியவர் கைது!

யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் அமைந்து பொலிஸ் சோதனை சாவடி மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்ணை பகுதியில் பொலிஸாரின் சோதனை சாவடியில் உள்ளகூடாரத்தின்கண்ணாடிகள் மீது சனிக்கிழமை இரவு நபர் ஒருவர் கல் வீச்சு தாக்குதல் மேற்கொண்டு,கண்ணாடிகளைஉடைத்துள்ளார். அதனை அடுத்து குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தான் மது போதையிலையே கல் வீசினேன் எனத் தெரிவித்துள்ளார். அந்த நபரை பொலிஸார்பொலிஸ்நிலையத்தில்தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29-.05.2023இல் வெளியிடப்பெற்றது.
இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 13 ஞாயிற்றுக்கிழமை 28.05.2023 கதிர் 71

## பௌத்த மதத்தை நிந்திப்பது அரகலயவின் நிகழ்ச்சி நிரல்

### இப்படித் திருப்பி விடுகிறார் நாமல்

அரகலவியன் நிகழ்ச்சித்திட்டங்களின் ஒன்று தான் பௌத்த மதத்தினை நிந்தித்தல் என்று பொதுஜனபெரமுனவில் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரகலய பல நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டது. அதில் ஒன்றுதான் பௌத்த மதத்தினை நிந்தித்தலாகும். 2

## நிந்தனைகள் இனியும் தொடர்ந்தால்

# பௌத்தர்கள் சட்டத்தைத் தம் கையிலெடுக்கும் நிலை வரும்

### சரத் வீர சேகர எம்.பி. எச்சரிக்கை



பௌத்த மதத்தினை நிந்திக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தால் பௌத் தர்கள் சட்டத்தினைக் கையில் எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று பொது ஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இத னைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரகலய மேற்குல நாடுகளினால் நிரழ்ச்சி நிரலிடப்பட்டு முன்னெடுக்கப் பட்டது என்பது அனைவரும் அறிந்த தொரு விடயமாகும்.

இலங்கை பௌத்த நாடு என்ற பாரம்பரிய பண்பாட்டைக் கொண் டிருக்ககூடாது என்ற சிந்தனை மேற்குல நாடுகளிடம் அதிகளவில் காணப் படுகின்றது. அதன் காரணமாகவே, மேற்குலகநாடுகளின் நிகழ்ச்சி நிரலில் பௌத்த மதத்தினை கலாசரத்தினை அவமதிக்கின்ற செயற்பாடுகள் தீவிரமடையத் தொடங்கியுள்ளன.

பௌத்தத்தினை அவமதிப்பவர்கள் வேறு மதங்களை அவமதிப்பதில்லை. அவ்வாறு செய்வார்களாயின் அவர் கள் கற்களால் எறியப்பட்டு கொலை செய்யப்படுவார்கள்.

நாட்டின் குற்றவியல் தண்டனைக் கோவை சட்டம் 208இன் கீழ் மதத்தினை அவமத்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இந் நிலைமைகள் நீடிக்கும், பௌத்த மக்கள் சட்டத்தினை கையில் எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் – என்றார்.

## ரணில் நாடு திரும்பியதும் புதிய தலைவர் நியமனம்

ஜப்பானிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு புதிய தலைவர் நியமிக்கப்படவுள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக நிதி இராஜாங்க அமைச்சர் ஹொான் சேமசிங்க தெரிவித்ததாவது:

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஜனக ரத்நாயக்கவை நீக்குவது தொடர்பான கடிதத்தை நிதியமைச்சின் செயலாளர் ஜனக ரத்நாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த நிலையில், ஜப்பானுக்கான உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடு திரும்பியதும் இலங்கையின் பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு ஒருவரை நியமிக்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது – என்றார்.

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## மாடுகளுக்கு மீண்டும் பெரியம்மை நோய்



கிளிநொச்சி மாவட்டத்தின் பல இடங்களிலும் மாடுகளுக்கு மீண்டும் பெரியம்மை நோய் பரவத் தொடங்கியுள்ளது

கண்டாவளை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள புண்ணைநீராவி கிராம அலுவலர் பிரிவில் சிலரது கால்நடைகளுக்கு பெரியம்மை அதிக பாதிப்பை ஏற்ப்படுத்தியுள்ளது.

அந்தக் கிராமத்தில் ஒருவர் சவாரி மாடுகள் இரண்டு வளர்த்து வந்த நிலையில் அதில் ஒன்று பெரியம்மை நோய் தாக்கம் காரணமாக இரண்டு வாரங்களுக்கு முன்பே இறந்து விட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதே கிராமத்தில் மற்றொரு மாடும் பெரியம்மை நோய்த்தாக் கம் காரணமாக உணவு இற்றி நீர் கூட அருந்த முடியாத நிலையில் காணப்படுவதாகவும் கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

பெரியம்மை நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளில் இருந்து நாளாந்தம் பெறப்படுகின்ற பாலின் அளவு குறைந்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நோயால் கால்நடைகளை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பலர் பாதிக்கப்படுகின்றனர் என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மருந்துகளின் விலைகளும் பல மடங்கு அதிகரித்துவிட்ட நிலையில் எல்லா மாடுகளுக்குமே சிகிச்சையளிக்க முடியாத நிலையில் அவற்றை சாக விட்டு வேடிக்கை பார்க்க வேண்டியிருக்கின்றது என்று கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி உட்பட வடக்கின் பல மாவட்டங்களிலும் பல மாதங்களுக்கு முன்னரும் இதே போன்று பெரியம்மை நோய் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. எனினும் பின்னர் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இப்போது அதன் தாக்கம் மீண்டும் அதிகரித்துள்ளது.

## உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு சதி குறித்து விசாரிக்க தெரிவுக் குழு

### அமைக்க சபாநாயகரிடம் ஆளும் தரப்பு எம்பிக்கள் கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணியில் பரந்த சதி இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா முன்வைத்த குற்றச்சாட்டை விசாரணை செய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினை நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஆளும் தரப்பின் 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவினர் இந்தக் கோரிக்கையை எழுத்து மூலமாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கையளித்துள்ளனர் என்று ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் குறித்த எழுத்துமூலமான கோரிக்கையில்,, 2021 மே 17 அன்று ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு டி லிவேரா (ஓய்வு பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர்) அளித்த நேர்காணலில் அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் முக்கியமானவை.

அந்த நேர்காணலில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னால் மிகப் பெரிய சதி இருப்பதாக கூறியுள்ளார்.

நௌபர் மௌலவி என்பவர், இந்த சதியில் முக்கியப் பங்காற்றினார் எனவும், அவரே மூளையாகச் செயல்பட்டார் என்றும் உறுதியாகக் கூறமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சஹ்ரான் ஹாஷிம் – தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்த முடிவு செய்திருந்தாலும் – சதியில் ஒரே ஒருவர் மட்டுமே ஈடுபட்டார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டமா அதிபராக இருந்த டி லிவேரா அனைத்து விசாரணை கோப்புகள், ஆதாரங்கள் மற்றும் தாக்குதல்களுடன் தொடர்புடைய பிற தகவல்களை நேரடியாகக் கையாண்டார். எனவே தாக்குதல்கள் பற்றி அவருக்கு – இதுவரை வெளியிடப்படாத தகவல்கள் ஏதாவது தெரிந்திருக்கலாம் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன.

அந்தவகையில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் நோக்கில் அவரது அறிக்கைகள் மற்றும் அவற்றின் அடிப்படையை விசாரிக்க வேண்டியது அவசியம் என்று நாம் நம்புகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



### போராட்டம் நடத்த ஏறி

## கூரையிலிருந்த கைதி கீழே இறக்கப்பட்டார்

யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் கூரைக்கு மேலேறி பட்டினிப் போராட்டம் நடத்துகிறார் என்று அறிவித்த கைதி இன்று மதியம் சிறைச்சாலை அதிகாரிகளினால் கீழே இறக்கப்பட்டார். உடனடியாக அவர் சிறை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

குற்றசெயல்களில் ஈடுபட்ட தற்காகத் தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வந்த, மாத்தறையைச் சேர்ந்த புஷ்பகுமார (வயது 41) பின்னர் யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் இருந்து தன்னை வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு கோரி சனிக்கிழமை பிற்பகல் முதல் சிறைக் கூரையில் ஏறி நின்று போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவித்திருந்தார் அவர். (03)

## வரிப் பிணக்குகளை தீர்க்க தனி நீதிமன்றம்

### உருவாக்கப்படும் என்கிறார் இராஜாங்க அமைச்சர்

வரி அறவீடு தொடர்பிலான பிணக்குகளைத் தீர்க்க தனி நீதிமன்றத்தினை நிறுவ உள்ளதாகத் தெரிவித்த பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, அறவீடு செய்யப்பட வேண்டிய வரி நிலுவைகள் தொடர்பில் விவரமான அறிக்கையொன்றை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் வரி நிலுவைகள் அதிகளவில் காணப்படுகின்றன. அவற்றை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் விரைந்து முன்னெடுக்கப்படவுள்ளன.

வரியை முறையாகச் செலுத்தாதுள்ளவர்கள் தொடர்பில் ஆட்சி தீவிரமான கரிசனை கொண்டுள்ளது. அது தொடர்பில் ஜனாதிபதிக்கு விவரமான அறிக்கை அடுத்த வாரத்தில் கையளிக்கப்படவுள்ளது.

அதனையடுத்து, வரி அறவீடுகள் தொடர்பான பிணக்குகளை முன்னெடுக்கத் தனி நீதிமன்றங்களை உருவாக்குவதற்கான நட வடிக்கைகள் தொடங்கப்படும் – என்றார்.

## மாணவியிடம் சேட்டைவிட்ட 19 வயது இளைஞன் கைது

### அக்கறைப்பற்றில் சம்பவம்

(கே ஏ ஹமீட்)

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புக்குச் சென்ற மாணவியை வீதியில் வழிமறித்து பாலியல் சேட்டை புரிய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் 19 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி எம்.எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

சனிக்கிழமை மாலை தனிப்பட்ட வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிகொண்டிருந்த மாணவியிடமே இளைஞன் சேட்டைவிட்டுள்ளார். அவர் மாணவியைத் தாக்கினார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மாணவி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மாண



வியின் பெற்றோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து சம்பந்தப்பட்ட இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு வீதிகளில் தொந்தரவு தருபவர்களைக் கைது செய்ய தனியான பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொறுப்பதிகாரி மஜீட் தெரிவித்தார்.

## கிணற்றினுள் வீழ்ந்து சிறுமி பரிதாபச் சாவு

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் பகுதியில் நேற்றுப் பிற்பகல் பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் விழுந்த ஆறு வயதுச் சிறுமி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

விளையாடிக் கொண்டிருந்த சிறுமியைத் திடீரெனக் காணாத நிலையில் உறவினர்கள் இணைந்து தேடினனர் வீட்டுக்கு அருகே இருந்த பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் இருந்து சிறுமியை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். சிறுமி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் கைவிரித்துவிட்டனர்.

மிருசுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த ச.சிம்சிகா என்ற சிறுமியே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# போலி செய்திகளை வெளியிடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவழிக்கை

## மனுஷ நாணயக்கார எச்சரிக்கை



வீட்டுப்பணிப் பெண்கள், தூய்மைப் படுத்தல் தொழிலாளர்கள், கட்டட நிர்மானப் பணியாளர்கள் உள்ளிட்டவர்களையும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதிக்குள் உள்வாங்கும் வகையில் தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த சட்ட திருத்தங்களின் போது தொழிலாளர்கள் உரிமைகள், சலுகைகள் என்பன இரத்து செய்யப்படவுள்ளன எனப் போலியான செய்திகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தொழிலாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. அதற்கமையவே தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் 80 ஆயிரம் தொழில் நிறுவனங்கள் தமது ஊழியர்களை ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பவற்றில் உள்வாங்கியுள்ளன.

எனினும் சட்ட திருத்தங்களின் ஊடாக ஒரேயொரு ஊழியரைக் கொண்டிருந்தாலும், அந்த நிறுவனமும் தமது தொழிலாளியை ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியில் உள்வாங்க வேண்டும் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்துவதே எமது இலக்காகும்.

மாறாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பவற்றைக் குறைப்பதோ அல்லது அவற்றை இரத்து செய்வதோ எமது நோக்கமல்ல.

ஓய்வு பெற்றதன் பின்னர் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கான உத்தரவாதத்துக்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

தொழிலைப் பாதுகாப்பதற்குப் பதிலாகத் தொழில் வாய்ப்புக்களைப் பாதுகாப்பதே எமது இலக்காகும். பெரும்பாலான தனியார் நிறுவனங்களில் தற்போதும் முறையான காப்புறுதித் திட்டங்கள் இல்லை. எனவே அரச உத்தியோகத்தர்களைப் போன்றே தனியார் துறையினருக்கும், மருத்துவம் உள்ளிட்ட சலுகைகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

தூய்மைப்படுத்தல் தொழிலில் ஈடுபடுபவர்கள், கட்டட நிர்மாணப்பணியாளர்கள், வீட்டுப் பணிப் பெண்கள் என அடிமட்டத்திலிருந்த ஒவ்வொரு தொழிலாளர்களும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பவற்றில் உள்வாங்குவதற்காகவே தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனினும் இவ்வாறான சட்ட திருத்தங்களின் போது தொழிலாளர்களின் சலுகைகள், உரிமைகள் முடக்கப்படவுள்ளன என சிலர் போலியான செய்திகளையும், தகவல்களையும் வெளியிடுகின்றனர்.

அவ்வாறானவர்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளிக்குமாறு தொழில் அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. -என்றார். (05)

### பௌத்த ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் வெளிப்பாடுகள் தற்போது அதிகரித்து வருகின்றன. இந்த நிலைமைகளுக்கு இடமளிக்க முடியது.

அரகலயவால் தம்மை செழுமைப் படுத்திக் கொண்டவர்கள் உள்ளார்கள். பதுங்கி வாழ்பவர்கள் உள்ளார்கள், வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் உள்ளார்கள்.

அரகல வெறுமனே மக்கள் போராட்டத்தை மையப்படுத்தியது அல்ல. அரகலயவுக்குள் பல நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. அவை மெல்ல வேறுவேறு வடிவங்களில் வெளிப்படுகின்றது -என்றார்.



# டயமன்ட், பேர்ள் கப்பல்கள் தீ விபத்துக்கள்; 89 கோடி இந்திய ரூபா டெல்லிக்கு வழங்கல்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

இலங்கை கடற்பரப்புக்குள் தீ விபத்துக்கு உள்ளான எம்.டி.நியூ டயமன்ட் மற்றும் எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்களின் போது, தீயைக் கட்டுப்படுத்துவதற்காக உதவிய போது இந்திய கடற்படைக்கு 890 (89 கோடி இந்திய ரூபா) மில்லியன் இந்திய ரூபா செலவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செலவுக்கான தொகையைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

தீ விபத்துக்களுக்காக இந்தியா நஷ்டஈடு கோரியுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போது இதனைத் தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு - நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்காக இந்திய கடற்படை ஒத்துழைப்பு வழங்கிய போது, அவர்களுக்கு ஏற்பட்ட பொருட் செலவுக்கான கொடுப்பனவுகளை மாத்திரம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. மாறாக இந்திய அரசாங்கம் எந்தவொரு இழப்பீட்டையும் கோரவில்லை.

அதற்கமைய நியூ டயமன்ட் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தை கட்டுப்படுத்தியமைக்காக 400 மில்லியன் இந்திய ரூபாவையும், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்துவதற்காக 490 மில்லியன் இந்திய ரூபாவையும் இந்திய கடற்படை செலவிட்டுள்ளது. இந்தச் செலவை செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இழப்பீடு கோரி இலங்கை தாக்கல் செய்துள்ள வழக்கில் இந்த செலவுகளையும் இணைத்து, அதனை இந்தியாவுக்கு வழங்குவது நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்திய உயர்ஸ்தானிகராலயம் அண்மையில் வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையிலும் இது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த செலவிற்கான தொகையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்திய உயர்ஸ்தானிகரால் நீதி அமைச்சு மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை, குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவர்கள் தவறாக சித்திரித்து செய்திகளை வெளியிடுகின்றனர். - என்றார். (05)

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணம் மற்றும் தங்க நகை திருட்டு!

## பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் 20 லட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் தங்க நகை திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் உள்ள அறையிலிருந்த இந்த பணத்தையும் தங்க நகைகளையும் சந்தேகநபர் திருடிச்சென்றுள்ளார் எனப் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வெளியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு துப்புரவு தொழிலாளியாக பணிபுரியும் 60 வயதான நபர் கைது செய்யப்பட்டார். (05)

# ஆறு. திருமுருகனின் பிறந்த தினத்தில் தெல்லிப்பழையில் இரத்ததான முகாம்!









தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபகரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் 62 ஆவது பிறந்ததினம் இன்றாகும்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபை, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், துர்க்காதேவி மகளிர் இல்லம், மாதர் சங்கம் என்பவற்றோடு தெல்லிப்பழை இளைஞர்கள் இணைந்து நேற்று (சனிக்கிழமை) தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வீதியில் அமைந்துள்ள சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகத்தில் மாபெரும் இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலைவரை நடைபெற்ற இந்த இரத்ததான முகாமில் பெருமளவான இளைஞர், யுவதிகள் கலந்து உயிர்காக்கும் உன்னத பணியில் ஈடுபட்டனர். (05)




# கிழக்கு கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனத்தில் இழைக்கப்படும் அநீதியைத் தடுத்து நிறுத்துக!

## கிழக்கு ஆளுநரிடம் இம்ரான் எம்.பி. கோரிக்கை



விரைவில் வழங்கப்படவுள்ள கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனத்தில் கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படவுள்ளது. அதனை உடனே தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆளுநருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

கிழக்கு மாகாண ஆளுநராக சமீபத்தில் கடமையேற்றுக்கொண்ட தாங்கள் கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில், குறிப்பாக, கல்வி விடயத்தில் அதிக அக்கறை செலுத்தி வருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

விரைவில் வழங்கப்படவுள்ள கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனத்தில் கிழக்கு மாகாண ஆசிரியர்கள் பலருக்கு பாரிய அநீதி இழைக்கப்படவுள்ளதாக நான் உணர்கிறேன். இது தொடர்பான தகவல்களைத் தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். எனவே, இந்த விடயத்தில் தாங்கள் தலையிட்டு, கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியில் இருந்து அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி அமைச்சின் 01/2016 சுற்றறிக்கைக்கமைய, கிழக்கு மாகாணத்தில் 2,383 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனை விட பின்வருவனவற்றின் அடிப்படையிலும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் 637 ஆசிரியர்கள் பதில் கடமை புரியும் அதிபர்களாக செயற்படுகின்றனர். எனினும், கணக்கெடுப்பில் இவர்கள் ஆசிரியர்களாகக் கருதப்படுகின்றனர்.

பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பதில் ஆசிரிய ஆலோசகர்கள், பாட இணைப்பாளர்கள் போன்ற பதவிகளில் 300 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களும் ஆசிரியர்களாகவே கணக்கெடுக்கப்படுகின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சம்பளமற்ற விடுமுறையில் 100 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் சென்றுள்ளனர். இவர்களும் கிழக்கு மாகாண ஆசிரியர் பட்டியலில் உள்ளனர்.

2016 இற்குப் பின்னர் இன்று வரை கிழக்கு மாகாணத்தில் பல புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல பாடசாலைகள் தரம் 11 வரை தரமுயர்த்தப்பட்டுள்ளன. எனினும், தற்போது அமுலில் உள்ள ஆளணி சுற்றறிக்கைக்குள் இவற்றுக்குத் தேவையான ஆசிரியர் விவரம் உள்வாங்கப்படவில்லை.

அதன்படி கணக்கிட்டால், மேலே குறிப்பிட்டவாறு 2,383 ஐ விட இன்னும் 1,300 இற்கு மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ளன.

இந்நிலையில், தற்போது வெளியிடப்பட்டுள்ள கல்விக் கல்லூரி ஆசிரியர் பட்டியலின்படி, கிழக்கு மாகாணத்துக்கு 512 பேரின் பெயர்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என அறிய முடிகிறது. இதேவேளை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு நியமனத்துக்காக இணைக்கப்பட்டுள்ளனர். இதிலுள்ள அநீதியை தங்கள் முன் வைக்கிறேன்.

கிழக்குக்கு வந்துள்ள பெயர்ப் பட்டியலின்படி, எந்தவொரு விஞ்ஞான ஆசிரியரும் கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பப்படவில்லை. எனினும், திருகோணமலை கல்வி வலயத்தில் 18 விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், கிண்ணியா கல்வி வலயத்தில் 10 விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், மூதூர் கல்வி வலயத்தில் 22 விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், கந்தளாய் கல்வி வ லயத்தில் 2 விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் வெற் றிடங்கள் உள்ளன. இதன்படி, திருகோணமலை மாவட் டத்தில் மட்டும் 52 விஞ் ஞான ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உள்ளது.

அதேபோல தமிழ் மொழி பாடத்துக்கு திருகோணமலை கல்வி வலயத்தில் 31 ஆசிரியர்களுக்கும், கிண்ணியா கல்வி வலயத்தில் 31 ஆசிரியர்களுக்கும், மூதூர் கல்வி வலயத் தில் 9 ஆசிரியர்களுக்கும், கந்தளாய் கல்வி வலயத்தில் 6 ஆசிரியர்களுக்கும், திருகோணமலை வடக்கு கல்வி வலயத்தில் ஓர் ஆசிரியருக்கும் என வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதன்படி, திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் 78 தமிழ் பாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை உள்ளது. இந்நிலையில், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல தமிழ் பாட ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு நியமனத்துக்காக இணைக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்று இன்னும் பல பாடங்களுக்குப் பல பாடசாலைகளில் பற்றாக்குறைகள் ஏற்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாண ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு நியமிக்கப்படவுள்ளமை மிகவும் துர்ப்பாக்கிய நிலையாகும்.

7 வருடங்களுக்கு முன்னைய சுற்றறிக்கையின்படியான கணக்கெடுப்பை மையமாக வைத்து தற்போது நடவடிக்கை எடுப்பது கல்வித்துறை எவ்வளவு தூரம் பின்தங்கியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இது மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் கல்வித்துறை மூலம் நாட்டின் மறுமலர்ச்சியை ஏற்படுத்த எடுக்கும் நடவடிக்கைக்கு பாரிய தடையாக இருக்கும் என்பதை தாங்களும் அறிவீர்கள்.

எனவே, இவ்விடயங்களைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட சகல ஆசிரியர்களையும், கிழக்கு மாகாணத்துக்கே நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆசிரியர்கள் சார்பாக தயவுடன் கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)



# கல்பிட்டியில் 630 கிலோ பீடி இலைகளுடன் வான் ஒன்றைக் கைப்பற்றினர் பொலிஸார்!

சட்ட விரோதமான முறையில் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் அடங்கிய பொதிகள் வானில் ஏற்றிச்செல்லப்பட்ட போது பொலிஸார் அவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், கல்பிட்டி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சுஜீவ டி சொய்சா தலைமையில் தலவில பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பீடி இலைகள் வான் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட நிலையில், அந்த வானை பொலிஸார் துரத்திச் சென்றபோது, அதிலிருந்த சந்தேக நபர் வானை அகர அனுவ பிரதேசத்தில் கைவிட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வானிலிருந்து 630 கிலோ பீடி இலைகளை பொலிஸார் மீட்டுள்ளதுடன், வானையும் மீட்கப்பட்ட பொருளையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசென்றுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மீட்கப்பட்ட பீடி இலைகள் கல்பிட்டியி லிருந்து புத்தளம் நோக்கி கொண்டு செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (05)

# விரிவுரையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் காணப்படும் விரிவுரையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் காணப்படும் விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசார் பணியாளர் பற்றாக்குறை தொடர்பில் பல்கலைக்கழகங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோள்களின் அடிப்படையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பிரதமரின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைக் கடிதங்களுக்கு அமைவாக, பிரதமரின் செயலாளர் தலைமையில் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கேற்ப பல்கலைக் கழகங்கள் மற் றும் உயர் கல்வி நிறுவனங்களில் காணப் படும் விரிவுரையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமர துங்க தெரிவித்தார்.

அமைச்சரஷ்வியின் அனுமதியின் படி, 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதி வரை ஓய்வுபெறும் விரிவுரையாளர்களின் எண்ணிக்கைக்குச் சமமான தொகை ஆளணியை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும், 2023 ஆம் ஆண்டு பதவியில் இருந்து விலகும் அல்லது சேவை வறிதாக்குதலுக்கு உட்படுத்தப்படும் விரிவுரையாளர்களின் எண்ணிக்கைக்காக 2023 ஆம் ஆண்டுக்கென உத்தேசிக்கப்பட்ட ஆளணி ஒதுக்கீட்டுக்குச் சமனான விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க மேலும் குறிப்பிட்டார்.

இதேநேரம், கடந்தவாரம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது பல்கலைக்கழக ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் முன்வைத்த கோரிக்கைகளைக் கரிசனையுடன் கேட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக அவை குறித்துக் கவனம் செலுத்துமாறு தனது அதிகாரிகளுக்குப் பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

# பொலிஸ்காவல் ராஜகுமாரியின் மரணம்: பொலிஸ் அதிகாரிகளைக் கைதுசெய்க!

## மனித உரிமை செயற்பாட்டாளர்கள் வலியுறுத்து



பொலிஸ்காவலின்கீழ் நிகழும் மரணங்கள் தொடர்பில் மீண்டும் கவனம் குவிக்கப்படுவதற்குக் காரணமாகியுள்ள ராஜகுமாரியின் உயிரிழப்பு தொடர்பில் கடும் கண்டனம் வெளியிட்டிருக்கும் சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளைப் பணி இடைநிறுத்தம், பணி இடமாற்றம் செய்வதைவிடுத்து, அவர்களைக் கைது செய்து உச்சபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

பிரபல தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பாளரான சுதர்மா நெத்திகுமார என்பவரின் இல்லத்தில் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த 42 வயதான ராஜகுமாரி என்பவர் அண்மையில் பொலிஸ் காவலின் கீழ் உயிரிழந்த சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சுதர்மா நெத்திகுமாரவால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகக் கடந்த 11 ஆம் திகதி விசாரணைக்காக வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்ட ராஜகுமாரி, பொலிஸ்காவலின்கீழ் உயிரிழந்துள்ளார். அவர் கைதுசெய்யப்பட்டமைக்கான பதிவுகள் எவையும் பொலிஸ் பதிவேட்டில் காணப்படாத நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதுடன் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தச் சம்பவம் தொடர்பில் ராஜகுமாரியின் கணவர் செல்வதுரை ஜேசுராஜுக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் சட்டத்தரணியும் சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவருமான சேனக பெரேரா, 'முதலாவதாக ராஜகுமாரியின் கைது சட்டவிரோதமான முறையிலேயே இடம்பெற்றுள்ளது. அதேபோன்று பொதுமக்களைப் பாதுகாப்பதே பொலிஸாரின் கடமையாக உள்ள நிலையில், பொலிஸ்காவலின்கீழ் ஒருவர் உயிரிழப்பதென்பது சட்டத்துக்கு அப்பாற்பட்ட பிரச்சினையாகும்' என்று சுட்டிக்காட்டினார்.

மேலும் 'ஒரு தமிழ் பணிப்பெண்ணை என்ன செய்தாலும், அதிலிருந்து இலகுவாகத் தப்பித்துக்கொள்ளமுடியும் என்று சிலர் கருதுகின்றார்கள். ஆனால் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

'இலங்கையின் கடந்தகால வரலாற்றை எடுத்துநோக்கையில் பொலிஸ்காவலின் கீழான மரணங்கள் ஒன்றும் புதிதல்ல என்பதைப் புரிந்துகொள்ளமுடியும். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து பதிவாகிக்கொண்டேயிருக்கின்றன. இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க வேண்டும் என்ற வலுவான தீர்மானம் மற்றும் அதனை முன்னிறுத்திய நடவடிக்கைகள் இன்மையும், பொலிஸ் திணைக்களம் நீண்டகாலமாகக் கட்டமைப்பு ரீதியான வன்முறைகளுக்குப் பழக்கப்பட்டிருப்பதுமே பொலிஸ்காவலின் கீழான மரணங்கள் தொடர்வதற்கான பிரதான காரணமாகும்' என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.


மேலும் சந்தேகநபர்கள் பொலிஸாரால் தாக்கப்படல், சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படல் என்பவை ஒருபுறமிருக்க பொலிஸ் நிலையங்களில் பணிபுரியும் பெண் பொலிஸார் கூட வாய்மொழி மூலமாகவும், உடலியல் ரீதியாகவும் பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பொலிஸ்காவலின்கீழ் உயிரிழக்கும்போது அதனை இந்தச் சமூகம் வெகுசுலபமாக ஏற்றுக்கொள்வதாகவும், அதுதொடர்பாக எவ்வித எதிர்ப்பையோ அல்லது கரிசனையையோ வெளிக்காட்டுவதில்லை எனவும் குறிப்பிட்ட அம்பிகா சற்குணநாதன், எனவே குறித்தவொரு தரப்பினருக்கு எதிரான இத்தகைய குற்றங்களை நாம் உளவியல் ரீதியாக அனுமதிக்கும்போது நாளை அது நமக்கெதிராகத் திரும்பக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது என்றும் எச்சரித்தார்.

இந்நிலையில் ராஜகுமாரியின் மரணத்துடன் தொடர்புடைய அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளும் கைதுசெய்யப்படவேண்டும் என்று வலியுறுத்திய சட்டத்தரணி சேனக பெரேரா, இது தொடர்பில் ராஜகுமாரியின் கணவர் செல்வதுரை ஜேசுராஜின் சார்பில் வெகுவிரைவில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதே விடயத்தை வலியுறுத்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், வெறுமனே பணி இடைநிறுத்தம் மற்றும் பணி இடமாற்றம் ஆகியவற்றுடன் நின்றுவிடாமல் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும், சட்டத்தின் ஆட்சி அனைவருக்கும் பொதுவானதும் சமத்துவமானதுமான முறையில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (05)

# ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கை வந்த விமானத்தில் யாழைச் சேர்ந்த நபர் சாவு!



ஆஸ்திரேலியாவின் மெல்போர்ணிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து கொண்டிருந்த விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் திடீரென சுகவீனமடைந்த நிலையில், குறித்த விமானத்தில் உயிரிழந்துள்ளார் என விமான நிலையத்துக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ணிலிருந்து 27 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 10.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் யு.எல்.605 என்ற விமா னத்திலேயே மரணம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரத்னலிங்கம் ராமலிங்கம் என்ற 75 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில், பயணிக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டதையடுத்து, அவர் விமானத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இது எந்த வகையிலான நியாயம்?

பௌத்த மத தத்துவம் மற்றும் கலாசாரத்தை அவமதித்த குற்றச்சாட்டில் நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாா எதிரிசூரியவை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

அண்மையில் அவரது நகைச்சுவை நிகழ்ச்சி ஒன்றில் பௌத்தத்தைப் பற்றி அவர் தெரிவித்த கருத்துக்களுக்காகவே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். திடீரென நாட்டை விட்டு வெளியேற முயற்சித்த போது கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை இரகசியப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பலாங்கொட கஸ்ஸப தேரர், நடாாவை கைது செய்யுமாறு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அத்துடன், குறித்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள், நடாாவின் சமூகவலைத்தளங்கள் ஊடாக கருத்தினை பரப்பியவர்களையும் கைது செய்து விசாரணைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கொழும்பில் நடைபெற்ற 'மோடாபிமானய' என்ற நகைச்சுவை மேடை நிகழ்ச்சியில் நகைச்சுவைக்காக அவர் வெளியிட்ட கருத்துக்களுக்காகவே இப்போது அவர் குறிவைக்கப்பட்டுள்ளார்.

பௌத்தம் தொடர்பானதனது கருத்துக்களுக்காகக் இந்த ஆண்டில் மட்டும் கைது செய்யப்படும் இரண்டாவது நபர் நடாஷா. இதற்கு முன்னர் சேபல் அமரசிங்க என்கிற யூரியூப்பர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். தலாதாமாளிகையிலுள்ள புத்தரின் புனிதப் பல் குறித்த அவரது கருத்துக்களுக்காக அவர் கைது செய்யப்பட்டார். தற்போது பௌத்தத்தை நகைச்சுவையாக்கியதற்காக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவருக்கும் பௌத்தத்தை நிந்திக்கும் நோக்கமோ அல்லது அத்தகைய கருத்துக்களைத் திட்டமிட்டுப் பரப்பும் நோக்கமோ இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் தமது பார்வையை வெளிப்படுத்தியிருந்தார்கள். ஒவ்வொருவருக்குமானகருத்துச்சுதந்திரம்அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதே அரசமைப்பில் உள்ள மதத்தை அவமதித்தல் என்கிற சரத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

உண்மையில் இவர்களுக்கு மதத்தை நிந்தனை செய்யும்நோக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. அல்லது அதை ஒரு கொள்கையாகவே கொண்டவர்களுமல்லர் இவர்கள். அப்படியிருக்கும்போது அவர்களின் கருத்துக்களுக்காக அவர்கள் கைது செய்யப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதும் ஏற்புடையதாக இல்லை. இது என்ன வகையிலான நியாயம்?

மதம் எப்போதுமே தனக்குள்ளான தத்துவ விசாரங்களைக் கொண்டிருக்கின்றது. புத்தரின் போதனைகளும் அந்த வழியிலேயே அமைந்திருந்தன. சகிப்புத்தன்மை மதத்தின் அதிகூடிய பெறுமதிமிகக்க அம்சங்களில் ஒன்று. மதம் போதித்த இந்த விடயங்கள் எல்லாம் எங்கே போயிற்று?

# போர்க்குற்றம் தொடர்பான ஆதாரங்களை திரட்டி நாம் ஐ.நாவிடம் கையளிப்போமாம்!

## பிரித்தானியத் தமிழர் பேரவை கிடுகுப்பிடி

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையுடன் தாம் மிகநெருக்கமாகப் பணியாற்றிவருவதாகத் தெரிவித்துள்ள பிரித்தானியத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் வீ.ரவிக்குமார், இலங்கையில் சமூக மட்டத்தில் இயங்கிவரும் அமைப்புக்களுடன் கூட்டிணைந்து மனித உரிமை மீறல்கள் குறித்த ஆதாரங்களைத் திரட்டி அந்தப் பொறி முறையிடம் கையளிக்கவிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் மற்றும் இனப்படுகொலை என்பன தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டும்செயன்முறையைஆரம்பிக்கவிருப்பதாகக் கடந்த 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று பிரித்தானியத் தமிழர் பேரவை அறிவித்தது. அதன்படி இந்தச் செயன்முறை முன்னெடுக்கப்படவுள்ள விதம், கூட்டிணைந்து பணியாற்றவுள்ள நபர்கள் மற்றும் அமைப்புக்கள், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறைக்கான பங்களிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு கோரியபோதே வீ.ரவிக்குமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக கடந்த 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னரான காலப்பகுதியிலிருந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் பிரித்தானியத் தமிழர் பேரவை மிகநெருக்கமாகப் பணியாற்றிவருவதாகவும், அதனால் எவ் வித பயனும் கிட்டப்போவதில்லை எனப் பல்வேறு தரப்பினர் விமர்சித்தபோதிலும் தாம் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் அழுத்தம் பிரயோகித்து-வந்ததாகவும் சுட்டிக்காட்டிய ரவிக்குமார், அதன்விளைவாகத் தற்போது ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை வரை முன்னேறியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 47 நாடுகள் அங்கம்-வகிக்கின்றன எனவும், எனவே இலங்கை தொடர்பில் வலுவானதொரு தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டுமாயின் குறைந்தபட்சம் 24 நாடுகளின் வாக்குகளையேனும் திரட்டிக்கொள்வது அவசியம் என்றும் தெரிவித்த அவர், இருப்பினும் அவ்வாறு நாடுகளின் வாக்குகளைத் திரட்டுவதற்குரிய பேச்சுகளை இலங்கையின் தமிழ் அரசியல் பிரதிநிதிகளோ அல்லது சிவில் சமூக அமைப்புக்களோ பெருமளவுக்கு முன்னெடுப்பதில்லை என்று கவலை வெளியிட்டார்.

எனவே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம்வகிக்கும் 47 நாடுகளில் வெறுமனே 13 மேற்குலக நாடுகளின் வாக்குகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக வலுவானதொரு தீர்மானத்தைக் கொண்டுவரமுடியாது என்றும், மாறாக எஞ்சிய 34 நாடுகளில் பெரும் பான்மையாக உள்ள ஆபிரிக்க நாடுகளின் ஆதரவைத் திரட்டிக்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் ரவிக்குமார் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளிடம் வெறுமனே வாய்மொழி மூலம் பேச்சு நடத்துவதைவிட, அவர்களிடம் ஆதாரங்களை சமர்ப் பிக்கும்போது அது தொடர் பாக அவர்கள் விசேட அவதானம்செலுத்துவதற்கான வாய்ப்புக்கள் உயர்வாகக் காணப்படுகின்றன எனவும் பிரித்தானியத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் வீ.ரவிக்குமார் தெரிவித்தார். (05)

# ஒழுக்காற்று விசாரணைகளிலிருந்து ஷாபி விடுவிப்பு மீண்டும் குருணாகல் வைத்தியசாலையில் நியமனம்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை




சிங்கள தாய்மாருக்கு சட்ட விரோதமாக கருத் தடை செய்ததாக பொய்யான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்ட குருணாகல் போதனா வைத்தியசாலையின் முன்னாள் பிரசவ மற்றும் மகப்பேற்று வைத்தியர் ஷாபி சிஹாப்தீன் தொடர்பில் சுகாதார அமைச்சு முன்னெடுத்த ஒழுக்காற்று விசாரணைகளில் அவர் குற்றச் சாட்டுக்களில் இருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில், வைத்தியர் ஷாபியை மீண்டும் குருணாகல் போதனா வைத்தியசாலையிலேயே நியமனம் வழங்கி கடமையில் இணைக்க சுகாதார அமைச்சு குருணாகல் போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியமுடிகின்றது. உடன் அமுலுக்கு வரும் வகையில் வைத்தியர் ஷாபியை இவ்வாறு குருணாகல் போதனா வைத்தியசாலையில் கடமைகளில் இணைத்துக்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சின் விசாரணைக் குழு மற்றும் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணைக் குழு ஆகியன வைத்தியர் ஷாபிக்கு எதிரான விசாரணைகளை முன்னெடுத்து கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி தனது அறிக்கையை சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீசந்திரகுப்தவிடம் கையளித்தது. அதன்படி அந்த அறிக்கையை அரச சேவைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சு அளித்த அறிக்கையை ஆராய்ந்த அரச சேவைகள் ஆணைக்குழு வெள்ளிக்கிழமை 26 ஆம் திகதி கடிதம் ஒன்றை சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கடிதம் ஊடாக அரச சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் தொடர்பான சபையின் செயலாளர் கலுகப்புஆரச்சியின் கையெழுத்துடன் இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்திலேயே வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீனை உடன் அமுலுக்கு வரும் வகையில் குருணாகல் வைத்தியசாலையில் பணியில் இணைக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டொன்று முன் வைக்கப்படும்போது 6மாதங்களுக்குள் ஒழுக்காற்று நடவடிக்கைகளை நிறைவு செய்ய வேண்டும் என நிபந்தனைகள் இருக்கும் போதும் வைத்தியர் ஷாபி தொடர்பிலான ஒழுக்காற்று விசாரணை நிறைவடைய 4 வருடங்கள் வரை சென்றமை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய விடயமாகும்.

உண்மையில் கடந்த 2019 மே 24 ஆம் திகதி இரவு 10 மணியளவில் தௌஹீத் ஜமாஅத் அமைப்பிடமிருந்து பணம் பெற்று அந்த அமைப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம் சிங்களத் தாய்மார்களுக்கு கருத்தடை செய்தமை, தவறான வழிகளில் பெற்ற பணத்தைக்கொண்டு சொத்துக்கள் சேர்த்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழும் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் இவர் கைது செய்யப்படாது போனால் நாட்டை விட்டு அவர் தப்பிக்க வாய்ப்பிருப்பதாகவும் இவருக்கும் இவரது வீடுகளுக்கும் சேதம் விளைவிக்கப்படலாம் எனும் ஊகத்தின் அடிப்படையிலும் குருணாகல் பொலிஸாரால் வைத்தியர் ஷாபி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சட்டவிரோத குடிப்பெயர்வைத் தடுக்க ஒத்துழைப்பு வழங்குங்கள் சாரா ஹல்டன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் வலியுறுத்து



இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் பிரித்தானியாவுக்கு குடிபெயரும் நடவடிக்கைகளை தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்குவருகைதந்த பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்து பசுபிக் வலயத்தின் பணிப்பாளர் மற்றும் இந்தியாவின் பணிப்பாளர் பென் மெலர் மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் ஆகியோருக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பு வெள்ளிக்கிழமை மாலை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது. நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் பிரித்தானியாவுக்கு குடிபெயரும் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு பிரித்தானியாவில் அண்மையில் இயற்றப்பட்ட சட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடியது.

பொது மக்களின் பாதுகாப்பையும், சட்டம், ஒழுங்கையும் முறையாக உறுதிப்படுத்த விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நால்வர் தொடர்பில் பென் மெலர் வினவியுள்ளார். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் போது இந்த நால்வர் சந்தேகத்தின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். தற்போது அவர்கள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகம் மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் அம்சங்கள் சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை பொலிஸாருக்கு சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் செயற்படுத்தல் தொடர்பில் பயிற்சி பட்டறை ஒன்றை நிகழ்நிலை முறைமையில் நடத்தவும், இதற்கு பிரித்தானிய நாட்டு பொலிஸாரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்துள்ளார். (05)